1987 ஏப்ரல் 21]

கிராமம்	குடியிருப்பு	உச்ச கட்டத்தில் பயன் பெறும் மக்கட் தொகை.
(19) பி. நல்லகவுண்டன் பட்டி	83. பி. நல்லகவுண்டன் பட்டி	555
(20) வெள்ளக்கால்பட்டி	89. வெள்ளக்கால் பட்டி	728
(21) மான்குப்பை	90. மான்குப்பையார் காலனி	289
	91. மான்குப்பை காலனி	2340
(22) கோட்டை கவுண் டன் பட்டி	92. ஆணைக்கவுண்டன் பட்டி	910
(23) சாமிநாயக்கன் பட்டி	93. சாமிநாயக்கன் பட்டியார் காலனி	650
	94. சாமிநாயக்கன் பட்டியார் காலனி	2,062

இணைப்பு

(21 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 430-க்கான விடையைக் காண்க.)

நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் பதவிகள் (முன்பு இப்பதவிகள் சப்-மாஜிஸ்டிரேட்டுகளின் பதவிகள் என்று அழைக்கப்பட்டன). 1966 ஆம் ஆண்டில் அரசிதழ் பதிவு பெற்ற பதவிகளாக ஆக்கப்பட்டன. அரசிதழ் பதிவுப் பெற்ற பதவிகளுக்குப் புதிதாக பணிவிதிகள் 1973 ஆம் ஆண்டு இயற்றப்பட்டன. இதற்கிடையில் சென்னை உயர்நீதி மன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியின் பரிந்துரைக்கு ஏற்ப, நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகள் நீதித்துறை முதல் வகுப்பு

[1987 ஏப்ரல் 21

மாஜிஸ்டிரேட்டு பதவிகளாக நிலை உயர்த்தப்பட வேண்டுமென்றும், அவ்வாறு நிலை உயர்த்தப்பட்ட பதவிகள் தமிழ்நாடு மாநில நீதித்துறை பணியின் கீழ் மாவட்ட முன்சீப் பதவித் தரத்துடன் ஒரே பதவித்தரமாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்றும் 1976-ல் அரசு ஆணையிட்டது. பல்வேறு கட்டங்களில், தற்போதுள்ள நீதித்துறை முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் இடத்தில் மாவட்ட முன்சீப் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள் என்று நீதித்துறை பதவிக்குப் புதிய பதவிப் பெயர் அளிப்பதற்கு சட்டப்படி வகை செய்வதற்கு சட்டமியற்றாமல் ஒருங்கிணைப்பு செயற்குறிப்புகளைச் செயல்படுத்த முடியாது என்ற காரணத்தினால், மத்திய அரசின் ஒப்புதலுடன், தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சட்டங்களில், மாஜிஸ்டிரேட்டு பற்றிய குறிப்புகள் (தனி விதித்துறைகள்) சட்டம் (சட்டம் எண் 33/1980) இயற்றப்பட்டது.

2. ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட முன்சீப் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு பதவிகளைக் கொண்டுவரும் தமிழ்நாடு மாநில நீதித்துறை பணி விதிகளுக்கான வரைவுத் திருத்தங்கள், உயர் நீதிமன்றத்துடனும், தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடனும் கலந்தாலோசித்து இயற்றப்பட்டன. மேற்சொன்ன விதிகளின் வரைவுத் திருத்தத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட முன்சீப்—நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு பதவியில் முறையாக நியமிக்கப்படுவதற்குத் தெரிந்தெடுப்பதற்கான நிதித்துறை தற்காலிக இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் அனைவரும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் முன்வர வேண்டும் என்ற விதித்துறை உள்ளது.

3. தற்காலிக நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் பணியினை வரன்முறைப்படுத்த அரசு முடிவு செய்துள்ளதால் அவர்களின் பணியினை வரன்முறை செய்வதைப்பற்றி அவ்விதியில் தகுந்த திருத்தங்களை செய்த பின்னரே மாவட்ட முன்சீப்—நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு பதவிக்கான திருத்திய விதிகளை வெளியிட முடியும். எனவே மாவட்ட முன்சீப் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு பதவிக்கான விதியினை தற்போது வெளியிட இயலவில்லை. சென்னை உயர்நீதிமன்றத்தில் டெல்லி உச்ச நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணையின் விளைவாக உயர் நீதிமன்றத்தில் தடையாணை இருந்ததால், அரசின் முடிவுப்படி தற்காலிக இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்

டுகளின் பணியினை இதுவரை வரன்முறைப்படுத்த இயலவில்லை. அத்தடை ஆணை 9—12—1986 ஆம் நாள் டெல்லி உச்ச நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தீர்ப்பினையொட்டி நீங்கியுள்ளது. அத்திர்ப்பின்படி, தற்காலிக இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு அரசு சென்னை உயர்நீதிமன்றத்தோடு தொடர்பு கொண்டு மேல்நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே தற்காலிக நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் பணியினை வரன்முறை செய்த பின் தகுந்த திருத்தங்கள் செய்யப்பட்டு மாவட்ட முன்சிப்—நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு பதவிக்கான திருத்திய விதிகளை வெளியிட அரசு நடவடிக்கை எடுக்கும். அதன் பின்னரே மாவட்டமுன்சிப் மற்றும் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு பதவியைக் கொண்டுவரும் ஒருங்கிணைப்புத் திட்டம் அமுல்படுத்தப்படும்.

இணைப்பு III

(309 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

சமூக நலத் துறை.

கோரிக்கை எண் 30.

கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88.

அத்தியாயம் 1.

1.1. கோரிக்கை எண் 30-ன் கீழ் 1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 92,18,97,000 நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

1.2. தமிழ் நாடு, நலப் பணிகளை செயல்படுத்துவதில் முன்னணியில் உள்ள மாநிலமாகும். அனைவரும் பயனடையும் வகையில் நலத் திட்டங்கள் நமது மாநிலத்தில் நன்கு விரிவான முறையில் நடத்தப்பட்டு வருகிறது. சமுதாயத்தில் மிகவும் முன்னேற வேண்டிய மூன்று பிரிவினராகிய மகளிர், குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர்களுக்கு அநேக நற்பணிகளை சமூக நல இயக்ககம் செயல்படுத்தி வருகிறது. சமுதாயத்தில் உள்ள இம்மூன்று பிரிவினருமே பொதுவாக பல்வேறு நலப் பணித் திட்டங்களில் முக்கியத்துவம் தரப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். இம்மூன்று பிரிவினர்களுக்கும் சேர வேண்டிய நலன்களுக்கெல்லாம் சமூக நலத் துறை ஒரு பாதுகாவலராக இயங்கி வருகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS